4. மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் 16-4-1986 அன்று கேட்ட வினாவுக்கு பதிலளிக்கையில் நான் உறுதியளித்ததற்கு ஏற்ப 28-4-1986 அன்று இரவு நானும், மதுவிலக்கு அமுல் பிரிவு டி.ஐ.ஜி. திரு. சர்மாவும் கொடி போடாத, யாரும் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியாத வகையில் திடீரென அண்ணாநகர் ஏ.ஜி. பிளாக் காண்டிபன் அச்சகம் உள்ள இடத்தைச் சுற்றி யுள்ள ரோடுகளுக்கும், மனை எண் 3128 ஏ உள்ள தெருக்களுக்கும் போய் ஏழு முதல் 8 மணிவரை நடந்து சென்று தெருவில் நடந்து செல்பவர்களையும், குடியிருக்கின்ற வீட்டில் உள்ளவர்களையும் விசாரித்தும், மேலும் நேரில் இடங் களையும் பார்த்தோம். அங்கு யாரும் கள்ளச் சாராயம் விற்பதாகச் சொல்ல வில்லை. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு அங்கு இது மாதிரி பேச்சு வழக்கு இருந்ததாகவும், ஆனால் கடந்த ஓரிரு ஆண்டுகளாக அந்தச் சொல் கேள்வி கூட இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆடவர்களையும் தாய்மார்களையும் சந்தித்து விசாரிக்கப்பட்டது. சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் முதல் கோட்டையில் பணி புரியும் அலுவலர் வரை விசாரிக்கப்பட்டது. காண்டிபன் அச்சகத்தில் பணி புரிவோரையும் விசாரித்தோம். அவைக்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறபடி அங்கு கள்ளச் சாராயம் விற்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.35)

5. அரசின் தீர்மானங்கள்.

(1) ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் : தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆதி திராவிடா-பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு* பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

---

* 351-383 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.
@ 384-403 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.